V.V. Titanium Pigments Pvt. Ltd.,
A-81, Sipcot Industrial Complex,
South Veerapandiapuram PO,
Thoothukudi – 628002, Tamil Nadu, India

# ஊழல் தடுப்புக் கொள்கை

வி.வி. டைட்டானியம் பிக்மெண்ட்ஸ் பிரைவெட் லிமிடெட் (VVTi'ன்) ஊழல் தடுப்புக் கொள்கையானது VVTi’ன் நடத்தை விதிகள், ஒப்பந்தங்கள், கொள்கைகள், விதிகள் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது.

## 1.0 கொள்கை அறிக்கை

வியாபாரத்தை நேர்மையாகவும் ஒழுக்க ரீதியாகவும் நடத்துவது எங்கள் கொள்கையாகும். நாங்கள் லஞ்சம் மற்றும் ஊழல்களை சகித்துக் கொள்ளமாட்டோம். மேலும் தொழில் ரீதியான வர்த்தக நடவடிக்கைகளிலும், உறவுகளிலும், ஒருமைப்பாட்டிலும் நேர்மையாக லஞ்ச எதிர்ப்பு அணுகுமுறையைக் கையாளுவோம்.

இந்தக் கொள்கையானது உயரிய நெறிகள், வெளிப்படைத் தன்மைக் கொண்ட வியாபார நெறிகள் பெரு நிறுவனங்களின் நடை முறைகளைப் பின்பற்றி நிறுவனத்தைப் பாதுகாத்தல் மற்றும் வியாபாரத்தின் நன்மதிப்பைக் கட்டிக்காப்பதுப் போன்ற விஷயங்களில் VVTi மற்றும் அதன் நிர்வாகத்தின் ஈடுபாட்டைப் பிரதிபலிக்கிறது.

## 2.0 நோக்கம் மற்றும் குறிக்கோள்

நமதுக் கொள்கையின் குறிக்கோள் மற்றும் எண்ணங்கள் யாதெனில்:

(அ) தெளிவானக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டும் நெறிகளை வகுப்பதன் மூலம் லஞ்சம் மற்றும் ஊழலால் நமது நிறுவனம் வியாபாரத்திற்கு ஏற்படவிருக்கும் ஆபத்துக்களைக் குறைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்வது.

(ஆ) ஊழியர்களையும் இயக்குநர்களையும் பணியில் முனைப்புடன் செயல்படவும் நல்ல எண்ணத்துடன் கடுமையாக உழைக்கவும் ஊக்குவிப்பது.

(இ) ஊழல் பற்றிய விஷயத்தில் தொடர்ந்துக் கவனமாகக் கவனிப்பது மற்றும் புலனாய்வுச் செய்வது.

(ஈ) ஊழலில் ஈடுபடும் தனிநபர்களுக்கு எதிரானக் கடுமையான நிலையான நடவடிக்கை எடுத்தல்.

(உ) ஊழல் ஈடுபாடு ஆபத்திலிருந்து எல்லா ஊழியர்களையும் மற்றும் இயக்குநர்களையும் ஆபத்துத் தொடர்பான அபாயத்தைக் குறைப்பது.

(ஊ) VVTi தனது வணிகத்தில் லஞ்சம் மற்றும் ஊழலை முற்றிலும் எதிர்க்குமென்றுத் தனது

அனைத்துப் பங்குதாரர்களையும் தொடர்புக் கொண்டு ஒருப் பொதுவானப் புரிதலை ஏற்படுத்துவது.

(எ) இந்தியாவின் ஊழல் எதிர்ப்புச் சட்டங்களின் முக்கியத் தேவைகளைச் சுருக்கமாக விளக்கவும், லஞ்சம் மற்றும் ஊழல் பிரச்சனைகள் கட்டுப்பாடுகளை எவ்வாறுக் கண்டறிந்துக் கையாளுவது மற்றும் வழிக்காட்டுதல்.

(ஏ) VVTi'ன் அனைத்து ஊழியர்களுக்கும் லஞ்சம் பற்றியக் கொள்கைகளைப் பரப்புதல் மற்றும் VVTi'ன் ஊழியர்களுக்கு லஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு சட்டங்களுக்கு இணங்குவதற்கானப் பொறுப்பினை வகுப்பது.

**3.0 யார்யாருக்கு பொருந்தும்?**

இந்தக் கொள்கை யாருக்குப் பொருந்தும்?

அ) VVTi நிறுவனத்தில் அனைத்துத் தொழிலாளர்கள் (ஒப்பந்தத் தொழிலாளர்கள் உட்பட) மற்றும் இயக்குநர்கள்.

ஆ) மூன்றாம் நபர் உட்படப் பங்குதாரர்கள், நமது நிறுவனப் பிரதிநிதிகள் அல்லது VVTi சார்பாகச் செயல்படும் மற்ற நபர்கள், தனிநபர்கள்.

**4.0 முக்கியக் கோட்பாடுகள்**

அ) இந்தக் கொள்கை எங்கள் சட்டப்பூர்வ ஒழுக்க நெறிமுறைகளுடன் இணங்குகிறது. மேலும், எங்கள் கட்டுப்பாட்டின் கீழுள்ள அனைவரும் இந்தக் கொள்கையுடன் இணக்கமாக இருப்பதை உறுதி செய்வதற்கான முழுப் பொறுப்பையும் இயக்குநர்குழுக் கொண்டுள்ளது. இயக்குநர், துணைத் தலைவர் மற்றும் பொது மேலாளர் ஆகியோர் உதாரணமாக இருந்து அவர்களைச் சார்ந்துப் பணி புரிபவர்களுக்கு இந்தக் கொள்கையைப் பற்றிய விழிப்புணர்வையும், புரிதலையும் கொண்டிருக்கிறார்கள் என்று உறுதிப்படுத்துவது அவர்களின் பொறுப்பாகும்.

ஆ) VVTi வெளிப்படையாக லஞ்சம் ஊழலுக்குத் தனது எதிர்ப்பைத் தெரிவிக்கிறது. எல்லா ஒப்பந்தக்காரர்களும், தொழிலாளர்களும், ஆலோசகர்களும் மற்றும் சம்பந்தப்பட்டக் கட்சிகளும் / நிறுவனங்களும் மற்றும் கூட்டாளிகளும், மேலாளர்களும் நிறுவனத்தோடு இணைந்து பணியாற்றும் நபர்கள், மேலாண்மை அதிகாரிகள் குழு மற்றைய நபர்கள் அனைவரும் இந்தக் கொள்கையை மதித்து நடப்பதை ஊக்குவிக்கவும் வரவேற்கவும் செய்கிறது.

**5.0 ஊழல் தடுப்புச்சட்டங்களின் முக்கியப் பிரிவுகள்**

இந்தியாவின் சட்ட ஆளுகைக்குள் செயல்படுத்தப்படும் ஊழல் தடுப்புச் சட்டங்கள் பின்வருமாறு:

1. இந்திய தண்டனைச் சட்டம், 1860
2. ஊழல் தடுப்புச் சட்டம், 1988
3. மணி லாண்டரிங் தடுப்புச் சட்டம், 2002
4. தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005
5. மத்திய ஊழல் தடுப்பு ஆணையச் சட்டம்
6. மாவட்டங்களில் செயல்படும் லோக் ஆயுக்தா
7. இந்திய அரசால் அவ்வப்போது அமல்படுத்தப்படும் மற்ற சட்டங்கள்.

இந்தியா, இங்கிலாந்து மற்றும் மற்ற நாடுகளின் "ஊழலில் ஈடுபடுவது" என்பதாவது – லஞ்சம் கொடுப்பது அல்லது வாங்குவது, லஞ்சம் கொடுப்பது மற்றும் வாங்குவதற்கு இடைத்தரகராகச் செயல்படுவது, தவறான நடவடிக்கை, அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவது, லஞ்சத்தை வியாபாரமாக்கிச் செயல்படுவது, பணம் கொடுப்பதற்கு வசதி செய்துக் கொடுப்பது, பணமாகவோ, சொத்தாகவோ, சேவையாகவோ நன்மைகளைப் பெறுவதற்கு அலுவலகப் பதவியைச் சட்டவிரோதமாகச் செயல்படுத்துவது, மற்றும் தனக்கோ அல்லது மற்றவர்களுக்கோ உரிமையைப் பெறுவது அல்லது மற்றவர்கள் சட்டவிரோதமாக நன்மைகளைப் பெறுவது.

மேற்கண்டபடி, VVTi ஊழியர்கள் அனைவரும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, தானாகவோ அல்லது மூன்றாம் நபர்த் தரகர்கள் மூலமாகவோ ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதோ, நிர்வாக அலுவலக விதிகளைச் சுருக்கவோ, பணமோ, வெகுமதியானப் பொருட்களோ, சேவையோ நன்மைகளோக் கொடுப்பதோ அல்லது மற்ற நபர்களிடமிருந்தோ அல்லது அலுவலகங்களிலிருந்தோ, அரசிடமிருந்தோ அல்லது அரசு உள்ளாட்சி அதிகாரிகளிடமிருந்தோ, அரசு அதிகாரிகளிடமிருந்தோ, தனியார் நிறுவனங்களிலிருந்தோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளிடமிருந்தோ ஒப்புக்கொள்வதோ, கொடுப்பதோ, உறுதிமொழிக்கொடுப்பதோ, வேண்டிக் கேட்பதோ, பணம் வாங்குவதோ அல்லது பணம் கொடுப்பதோக் கண்டிப்பாகத் தடைசெய்யப்படுகிறார்கள்.

### 6.0 தடைசெய்யப்பட்ட அல்லது வரையறைப்படுத்தப்பட்டச் செயல்பாடுகள்

பாலிசியின் மூலம் தடைசெய்யப்பட்ட அல்லது வரையறைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் பற்றிச் சில உதாரணங்கள் கீழேத் தரப்பட்டுள்ளது.

1. பணத்தையோ அல்லதுப் பொருளையோக் கெட்ட எண்ணத்துடன் மோசடியாகப் பெறுவது
2. குற்றமுரு நம்பிக்கை மோசடி
3. ஏமாற்றுவது
4. லஞ்சம் கொடுப்பது அல்லது வாங்குவது
5. கீழேக் கண்டுள்ளவாறு அளவுக்கு அதிகமாக நன்கொடைகளை ஏற்பது அல்லது கொடுப்பது:

I. அன்பளிப்போ அல்லதுப் பிரதிநிதிகளுக்குச் செலவு, வியாபார நிமித்தம் மரியாதைவரவேற்புச் செலவு உட்பட ஒரு ஊழியர் நிறுவனத்திற்காக ஒரு நபருக்கு அல்லது நிர்வாகத்துக்குச்

செய்வது அல்லது ஊழியர்கள் நிறுவனத்தில் தமது வேலைக்காக மற்றவர்களிடமிருந்தோ அல்லது மற்ற நிறுவனங்களிடமிருந்தோ வாங்குவது இவைகள் கீழ்க்கண்ட ஐந்து வரையறைக்குட்பட்டவையாக இருத்தல் வேண்டும்.

அ) நிறுவனத்தின் நியாயமான நடவடிக்கையில் நேரடியாகத் தொடர்புடையவை: உதாரணமாக ஒருச் சொற்பொழிவு அல்லது வியாபாரத் திட்டங்களை நிறைவேற்றுவது அல்லது வெற்றிகரமாக ஒப்பந்தத்தை நிறைவேற்றி முடிப்பது அல்லது பொது விடுமுறை அதாவது கிறிஸ்துமஸ், தீபாவளி, புத்தாண்டு, சர்வதேச மகளிர் தினம், ஆண்டுவிழாக்கள், பிறந்தநாள் விழாக்கள்.

ஆ) நியாயமாக இருப்பது, ஏற்றவாறு இருப்பது ஆடம்பரமாக இல்லாதிருப்பது.

இ) சேவைக்காக, நடவடிக்கைக்காக, தவிர்ப்பதற்காக முறைமுகமாக வழங்கப்படாதப் பணம், கூட்டுச்சேர்ந்து சதிசெய்வது, பாதுகாப்பது, சில முக்கிய முடிவெடுப்பது, ஒப்பந்தம் போடுவது, அனுமதி வழங்குவது, அனுமதிப்பது அல்லது பணம் வாங்குவதை சட்டவிரோதமாகவும் நியாயத்திற்கு எதிராகவும் செயல்பட எந்த நபரையும் தூண்டுவது.

ஈ) அன்பளிப்பு மற்றும் பிரதிநிதிச் செலவுகள் பற்றியத் தகவல்களை வெளியே சொல்வதன் மூலம் நிறுவனத்திற்கோ, ஊழியர்களுக்கோ மற்ற நபர்களுக்கோ அவர்களின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிப்பது.

உ) கொள்கைக்கோ, நடத்தை விதிகளுக்கோ, நிறுவனத்தின் உள்விவகாரம் சம்பந்தப்பட்ட ஆவணங்கள், விதிகள் மற்றும் சட்டங்கள் மீதோ எப்போதும் விரோதமாக இல்லாதிருத்தல்.

II. நிறுவனம் சார்பாக அதன் ஊழியர்களுக்கு மற்றும் மூன்றாம் நபர்களின் பிரதிநிதிகளுக்கு அன்பளிப்புக் கொடுப்பது நிறுவனத்தின் அன்பளிப்புக் கொள்கை விதிகளுக்குட்பட்டது.

6. வர்த்தக ரீதியாகப் பயன்களைப் பெறுவதற்காகத் தருமம் செய்வது
7. அரசியல் நடவடிக்கைகளில் பங்கெடுப்பது மற்றும் பங்களிப்பைக் கொடுப்பது
8. வர்த்தக ரீதியாகப் பயன்பெறும் பொருட்டு அரசு அதிகாரிகளுக்கோ அல்லது அவர்களின் உறவினர்களுக்கோ (அல்லது அவர்களின் நன்மைக்காக) பணம் கொடுப்பது
9. மற்ற நெறிமுறணாண செயல் மற்றும் தவிர்த்தல்.

ஊழல் தடுப்புச் சட்டங்களுக்கோ அல்லதுக் கொள்கையின் தேவைக்கோ அல்லது விதிகளுக்கு விரோதமாகப் பங்குதாரர்களையோ, முகவர்களையோ, இணைந்துச் செயல்படும் நிறுவனங்களையோ, தரகர்களையோ அல்லது வேறு நபர்களையோ உபயோகிப்பது.

**7.0 நடைமுறைப்படுத்துதல் மற்றும் இணங்குதல்**

இக்கொள்கையை நடைமுறைப்படுத்துவது என்பது VVTi இயக்குநர் / துணைத் தலைவர் / பொது மேலாளர் அவர்களின் உத்தரவால் செய்யப்படும். எல்லா ஊழியர்களும் (இந்தக் கொள்கைக்குட்பட்ட அனைத்து அதிகாரிகள்) கொள்கையை மதித்து நடப்பதோடு இந்தக் கொள்கைக்குள் தனது நடவடிக்கைகளை / நடத்தைகளை நடத்திக் கொள்ள வேண்டியது

அவர்களின் கடமையாகும்.

ஊழியர்கள் இந்தப் பாலிசியின் கொள்கைகள் மற்றும் தேவைகளை இணக்கமாக செய்வது அவர்களின் செயல்திறன் மற்றும் உத்தியோக உயர்வு மதிப்பீடு செய்யப்படும்போதுக் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

## 8.0 அறிக்கை மற்றும் நடவடிக்கைகள்

இக்கொள்கைகளை மீறுவது மற்றும் கொள்கைகளைப் பின்பற்றாமல் நடப்பது அந்தந்த அதிகாரிகள் மட்டத்தில் செயல்படும் ஒழுங்குநடவடிக்கைக் குழுவுக்குத் தெரிவிக்கப்பட்டு அந்தக் குழுத் தேவையான நடவடிக்கை எடுக்கும்.

இந்தக் கொள்கைக்கு உட்பட்ட ஏதாவது ஒரு ஊழியர் அல்லது நபர், ஊழல் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகக் காணப்பட்டால் அல்லதுக் கொள்கையை மீறிச் செயல்படுபவரேயானால் அல்லது ஏதாவதுப் பொய்ப்புகார்க் கொடுப்பாரேயானால் அவர் மீது ஒழுங்கு நடவடிக்கையோ, வேலையிலிருந்து நிரந்தரமாக நீக்கப்படுவதோ அல்லது நிர்வாக ரீதியான அல்லதுக் கொள்கையில் சொல்லப்பட்டுள்ளப் பொருத்தமானச் சட்டப்படிக் குற்றவியல் உரிமையியல் நடவடிக்கைகளோ எடுக்கப்படும்.

அதிகாரிகள் மட்டத்திலான ஒழுங்கு நடவடிக்கைக் குழுவானதுக் குறிப்பிட்டக் காலவரை அடிப்படையில் கொள்கை மீறல் சம்பந்தமாக அறிக்கையை Corporate Conduct & Ethics Committee க்கு அனுப்பும். மேலும், அடுத்தடுத்தக் கூட்டங்களில் அந்த அறிக்கையை மறுபரிசீலனையும் செய்யும்.

## 9.0 விதிமீறல் சம்பந்தமான அறிக்கை சமர்ப்பிக்கும் வழிமுறை

### I. ஊழியர்கள், அதிகாரிகள், மற்ற நபர்களுக்கு எதிராக அறிக்கை விடுதல் (பங்குதாரர்கள், பிரதிநிதிகள் உட்பட)

ஏதாவது ஊழியர்களோ அல்லது மற்ற நபர்களோ, தங்கள் நடவடிக்கையின் மீது சட்டப்பூர்வமான நடவடிக்கையில் ஏதாவது சந்தேகம் ஏற்படுமானாலோ அல்லது VVTi சார்பாகச் செயல்படும் மற்ற ஊழியர்கள், ஒப்பந்தக்காரர்கள், நபர்கள் நடவடிக்கையில் செயல்படாத்தன்மை, விதிமீறல் ஆகியவற்றில் குறைபாடுக் காணப்பட்டால் அதுப்பற்றி அவர்கள் கீழக்கண்ட முறைப்படி அறிவிக்கலாம்.

அ) மின் அஞ்சல்: hr@vvtitanium.in

ஆ) தொலைபேசி: 0461-2340491 and +91-9894996339

இ) புகார்த் தெரிவிப்பது: பொது மேலாளர் மற்றும் அந்தந்த ஊழியரின் துறைத்தலைவர்.

பொது மேலாளர் / துறைத்தலைவர் அந்த விதிமீறல்களைப் பற்றி அந்தந்த அதிகாரிகள் மட்ட ஒழுங்குநடவடிக்கைக் குழுவிடம் தெரிவிப்பார்.

**II. இயக்குநர்குழு உறுப்பினர் மீது புகார் தெரிவிப்பது**

ஒருவேளை இயக்குநர்குழு உறுப்பினரோ அல்லது உறுப்பினர்களோ ஊழலில் ஈடுபடுவாரேயானால், அதுப்பற்றி இயக்குநர் அல்லது மற்றும் இயக்குநர்குழுவின் பெருந்தலைவரிடம் தெரிவிக்கவேண்டும். மேலும் அதுப்பற்றி இன்னதுச் சரியெனக் கருதும் நடவடிக்கையை அவர் எடுப்பார்.

விதிமீறல்கள் பற்றித் தெரிவிக்கும் நபர்களைப்பற்றியத் தகவல்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டியதுத் துணைத் தலைவர் / பொதுமேலாளர் / ஒவ்வொருத் துறைத்தலைவரின் கடமையாகும். மேலும் அதுப்போன்றத் தகவல்களை அதாவது அறிக்கையின் போதோ அல்லதுப் புலனாய்வின் போதோத் தன்னிடம் கிடைக்கப்பெறும் தகவல்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதும் அவரின் பொறுப்பு ஆகும். அந்தத் தகவல்களை எதற்காகக் கொடுக்கப்பட்டதோ அதற்கு மட்டுமேப் பயன்படுத்தப்படவேண்டும். அதனைச் சட்டப்படியானத் தேவைகளைப் பூர்த்திசெய்வதுத் தவிர்த்து வேறு மூன்றாம் நபர்களிடம் பகிர்ந்துக் கொள்ளக் கூடாது.

### 10.0 கொள்கைச் செயல்படாத்தன்மைப் (ஒழுங்காக நிவர்த்திசெய்யாததால்) பொறுப்பு

இயக்குநர்கள்குழு உறுப்பினர்கள், துணைத் தலைவர், பொது மேலாளர், நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்கள், மற்றும் VVTi சம்பந்தப்பட்ட ஊழியர்கள் அனைவரும், அவர்களின் நிலை, பதவியின் பெயர் முதலியவைகளைக் கருத்தில் கொள்ளாமல், ஒவ்வொருவரும் அவர்களின் தனிப்பட்ட நிலையில் கொள்கையின் கோட்பாட்டையும் தேவையையும் பூர்த்தி செய்யக் கடமைப்பட்டவர்கள் ஆவார்கள் என்பதோடுக் கொள்கையில் கோட்பாட்டையும் தேவையையும் மீறும் அவர்களின் கீழ்ப் பணிபுரிபவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமைக்கும் அவர்கள் பொறுப்பாவார்கள்.

### 11.0 பயிற்சி மற்றும் தகவல் தொடர்பு

எல்லா ஊழியர்களும் கொள்கைச் செயல்படுத்தும்முறை மற்றும் கடைப்பிடித்தல் பற்றித் தேவையானப் பயிற்சியை முறையாகப் பெறுவது அவசியம்.

VVTi நிறுவனத்தில் முற்றிலும் லஞ்சம் மற்றும் ஊழல் சகிப்பின்மை என்ற நிலைப்பாட்டை எல்லா சப்ளையர்களுக்கும், ஒப்பந்தக்காரர்களுக்கும், ஏஜென்சிகளுக்கும், வியாபார மற்றும் மற்றவகைப் பங்குதாரர்களுக்கும் முதன் முதலிலும் பின்னர்த் தேவைப்படும் நேரத்திலும் தெரியப்படுத்தவேண்டும்.

### 12.0 மாற்றம்

இந்தக் கொள்கையில் ஏதாவது ஒரு விதித் தேவைப்படாமல் இருக்குமேயானால் அல்லதுத் தேவைப்படும் சட்டத்தில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டால் அல்லது இயக்குநரோ அல்லது துணைத் தலைவரோ அல்லது பொது மேலாளர் அவர்கள் ஏதாவது மாற்றம் செய்யப்படவேண்டுமென்றுக் கருதினாலோ, இயக்குநர் / துணைத் தலைவர் / பொது மேலாளர் ஆகியோர்கள் இந்தக் கொள்கையில் தங்கள் கையொப்பமிட்டு உத்தரவின் பேரில் மாற்றம் செய்ய முடியும்.